பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
08 07 2025 **TUESDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- நிலக்கரி உற்பத்தி நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 16 புள்ளி மூன்று ஒன்பது சதவீதம் உயர்ந்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.
- புதுதில்லி வந்துள்ள ஐக்கிய அரபு எமிரேட்டின் கடற்படை கமாண்டர் மேஜர் ஜெனரல் **Humaid Mohammed Abdullah Al Remeithi** இந்திய கடற்படை அதிகாரிகளுடன் இன்று பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.
- கடலூர் மாவட்டம், செம்மங்குப்பத்தில் பள்ளி வாகனம் மீது பயணியர் ரயில் மோதிய விபத்தில் 3 மாணவர்கள் உயிரிழந்தனர்.
- நோபல் பரிசுக்கு அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்பின் பெயரை இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாஹூ பரிந்துரைத்துள்ளார்
- ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 6 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>>>><<<<<<<<

நிலக்கரி உற்பத்தி நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 16 புள்ளி மூன்று ஒன்பது சதவீதம் உயர்ந்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்தங்கள் காரணமாக, நிலக்கரி உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படும் நிலக்கரியின் அளவும் 13 புள்ளி பூஜ்யம் மூன்று சதவீதம் அதிகரித்துள்ளதாக திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

உலகிலேயே இந்தியாவில் தான் இஸ்லாமியர்கள் மிகவும் பாதுகாப்பாக உள்ளனர் என்று மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஊடுருவல்காரர்களுக்கு ஆதரவளிப்பது தேசத்துரோக குற்றச்சாட்டுக்கு இணையானது என்று கூறினார்.

பீகாரில் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமாரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாக குற்றம் சாட்டிய அமைச்சர், குற்றச்செயல்கள் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளை ஊக்குவித்து அரசியல் ஆதாயம் தேட முயற்சி நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

>>>>>>>><<<<<<<<

ஜம்மு கஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து பிரதமரின் ஆலோசகர் திரு. தருண் கபூர் ஆய்வு நடத்தியுள்ளார்.

ஸ்ரீநகரில் நடைபெற்ற உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்தில், அந்த யூனியன் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நீர்மின் திட்டப் பணிகள், உதம்பூர் - ஸ்ரீநகர் - பாரமுல்லா ரயில்பாதை உள்ளிட்ட பல்வேறு ரயில்வே திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகள் திரு. தருண் கபூரிடம் எடுத்துரைத்தனர்.

தேசிய நெடுஞ்சாலை ஆணையம், எல்லைப்புற சாலைகள் நிறுவனம் போன்ற அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகள் மற்றும் ஸ்ரீநகரில் உள்ள எய்ம்ஸ் வளாகங்களின் செயல்பாடு குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. குறிப்பாக, பிரதமரின் சூரியசக்தி வீட்டுவசதி திட்டம் குறித்தும் விரிவான ஆய்வு நடத்தப்பட்டது.

கூட்டத்தில் பேசிய திரு. தருண் கபூர், ஜம்மு கஷ்மீரின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார்.

ஜம்மு கஷ்மீரை வளர்ச்சிக்கான முன்மாதிரி பகுதியாக மாற்றுவதுடன், டிஜிட்டல் ஆளுகையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. தருண் கபூர் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

ஐக்கிய அரபு எமிரேட்டின் கடற்படை கமாண்டர் மேஜர் ஜென்றல் **Humaid Mohammed Abdullah Al Remeithi** அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

இன்று காலை அவர் புதுதில்லியில் உள்ள தேசிய போர் நினைவுச் சின்னத்தில் மலர்வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார்.

பின்னர் புதுதில்லியில் உள்ள **South Block** வளாகத்தில் மேஜர் ஜென்ரல் **Remeithi**-க்கு இந்திய கடற்படையினரின் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

நாளை வரை புதுதில்லியில் தங்கியிருக்கும் அவர், இந்திய கடற்படை தலைமைத் தளபதி உள்ளிட்ட அதிகாரிகளை சந்தித்து, இருநாட்டு கடற்படைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

**>>>>>>>><<<<<<<<**

தமிழகத்தின் கடலூர் மாவட்டம், செம்மங்குப்பத்தில் ரயில் தண்டவாளத்தை கடக்க முயன்ற பள்ளி வாகனம் மீது பயணியர் ரயில் மோதிய விபத்தில் மூன்று மாணவர்கள் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த மாணவர் ஒருவரும், வாகன ஓட்டுநரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கியவர்களை காப்பாற்றச் சென்ற ஒருவரும் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஜெயக்குமார் தெரிவித்தார்.

இந்த விபத்து குறித்து ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார். லேசான காயமடைந்தவருக்கு 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில்வே சார்பிலும் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு இரண்டரை லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

இதற்கிடையே, இந்த விபத்தில் பள்ளிக் குழந்தைகள் உயிரிழந்த செய்தி அதிர்ச்சியும், மிகுந்த வேதனையையும் அளிப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைவில் நலம் பெற பிரார்த்திப்பதாகவும் அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி, அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>>>>>><<<<<<<<

உலகின் மிக உயரிய விருதான நோபல் பரிசுக்கு அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்பின் பெயரை இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாஹூ பரிந்துரைத்துள்ளார்.

**Gaza** பகுதியில் இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வருவது உட்பட உலகம் முழுவதும் அமைதியை நிலைநாட்டுவதற்காக அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் அர்ப்பணிப்பு உணர்வுடன் ஆற்றி வரும் பணிகளை அங்கீகரிக்கும் வகையில் அவரது பெயரை அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிந்துரைப்பதாக திரு. நெதன்யாஹூ தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

சர்வதேச விண்வெளி நிலையம் வானில் தென்மேற்கு திசையிலிருந்து வடகிழக்கு திசையை நோக்கி நகர்ந்து சென்ற காட்சி திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப்பகுதியில் தெளிவாக தென்பட்டது.

கடந்த மாதம் 25ஆம் தேதி டிராகன் விண்கலம் மூலம், விண்வெளிக்குச் சென்ற இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா உள்ளிட்டோர் இந்த சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு வரும் நிலையில், அது இந்தியாவை கடந்து சென்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜசேகர பாரதி 37 செகண்ட்ஸ்)

>>>>>>>><<<<<<<<

நாட்டின் வடமேற்குப் பகுதியில் அடுத்த 4 நாட்களுக்கு கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சத்திஷ்கட், ஹரியானா, ஒடிசா, பஞ்சாப், உத்ராகண்ட், தெலங்கானா மாநிலங்களிலும் இன்று மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ள அந்த மையம், கொங்கன், கோவாவிலும் கனமழை பெய்யும் என்று கூறியுள்ளது.

தலைநகர் தில்லியில் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, ஜம்மு கஷ்மீரில் பெய்து வரும் கனமழை காரணமாக, ரஜோரி பகுதியில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதால் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

25 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டு பங்குப் பத்திரங்கள் ஏலத்தில் விடப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிவிப்பில் 2032ஆம் ஆண்டு, ஜூலை 14ஆம் தேதி முதிர்வடையக் கூடிய 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பங்குகளும், 2074ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் தேதி முதிர்வடையக் கூடிய சுமார் 14 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பங்கு மறுவெளியீடுகளும் ஏலம் விடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 6 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

கிர்கிஸ்தானின் **Bishkek**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் 15 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவுகளில் **Vansh, Aryan, Prathamesh, Rohit, Sachin** மற்றும் கார்த்திக் தங்கப்பதக்கம் வென்றனர்.

57 கிலோ எடைப்பிரிவில் தினேஷ் வெள்ளிப்பதக்கமும், 75 கிலோ எடைப்பிரிவில் **Love** வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

>>>>>>>><<<<<<<<

அமெரிக்க ஸ்மேஷ் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-7, 9-11, 11-5, 11-8 என்ற செட்கணக்கில் சகநாட்டு வீரரான மானவ் தாக்கரை வென்றார்.

>>>>>>>><<<<<<<<

உகாண்டா பாரா பேட்மிண்டன் போட்டியில், இந்தியா 8 தங்கம், 6 வெள்ளி, 10 வெண்கலப்பதக்கம் என 24 பதக்கங்களை வென்றது.

>>>>>>>><<<<<<<<

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Durga Kandrapu** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>>><<<<<<<<

இங்கிலாந்துக்கு எதிரான இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் 3-2 என்ற ஆட்டக்கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

>>>>>>>><<<<<<<<